| endo | **ஆவணம்:** VV-POL-00212 | **வடிவம்** 1.0 |
|---|---|---|
| **உரிமையாளர்: கூட்டாண்மை இணக்கம்** | **வகை:**கொள்கை | |
| **பொருள்: ஊழல் எதிர்ப்பு இணக்கம்** | | |

## 1. நோக்கம்

இக்கொள்கையானது லஞ்சமளிப்பு மற்றும் ஊழல் தொடர்பான அபாயம்களையும் மற்றும் Endo-வின் ஊழல் எதிர்ப்புத் தரநிலைகளுக்கு இணங்குவதற்கான தேவைப்பாடுகளையும், முக்கியக்கூறுளையும் கூடுதலாக கருவிகளையும் வழங்குகிறது.

## 2. வீச்சு

இக்கொள்கையானது Endo International plc, அதன் துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் (கூட்டாக, "Endo" அல்லது "நிறுவனம்") ஆகியவற்றுக்குப் பொருந்தும். இதில் உலகெங்கும் உள்ள எல்லா Endo அலுவலர்கள், இயக்குநர்கள், பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் ("Endo பணியாளர்கள்"), மற்றும் எல்லா முகவர்கள், ஆலோசகர்கள், விநியோக நிறுவனங்கள், மற்றும் Endo-வுக்காக அல்லது Endo-வின் வாணிகம்/தொழில் சார்பாகச் செயல்படும் பிற வெளித் தரப்புகள் ("Endo தொழில் கூட்டாளர்கள்") ஆகியோரும் அடங்குவார்கள்.

## 3. கொள்கைக் கூற்றுகள்

### 3.1 பொதுவானவை

நாம் செயல்படும் நாடுகளில் உள்ள சட்டங்களின்படி உயர்ந்த தரநிலையிலான அறவழி நடத்தையுடன் செயல்படுவதில் Endo பற்றுறுதி கொண்டுள்ளது. இச்சட்டங்களில் அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டம் (Foreign Corrupt Practices Act - FCPA), UK லஞ்சமளிப்புச் சட்டம் (UK Bribery Act - UKBA), இந்திய ஊழல் தடுப்புச் சட்டம் (India Prevention of Corruption Act) ஆகியவையும் அடங்கும். இச்சட்டங்கள் அரசு அதிகாரிகளுக்கு லஞ்சங்கள், கையூட்டுகள் அல்லது மதிப்புள்ள எதையும் அளிப்பதாகக் கூறுவதை அல்லது அளிப்பதைச் சட்டவிரோதமாக்குகின்றன. மேலும், வணிக லஞ்சமளிப்புக்கு - அதாவது, அரசு அதிகாரிகள் சம்பந்தப்படாமல் தனிப்பட்ட தரப்புகளுக்கு இடையிலான லஞ்சமளிப்புக்கு - எதிராகப் பல நாடுகள் சட்டங்கள் வகுத்துள்ளன.

கணக்குப் புத்தகங்களையும் பதிவுகளையும் துல்லியமாக வைத்திருந்து, செயல்திறனுள்ளஅகநிலைக் கணக்குப்பதிவுக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் நிர்ப்பந்திக்கின்றன. இந்தச் சட்டவிதிகள் லஞ்சமளிப்பும் ஊழலும் முறையான பணமளிப்புகளாக மறைக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டவை.

Endo பணியாளர்கள் மற்றும் தொழில் கூட்டாளர்கள் எந்தப் பொருந்தும் ஊழல் எதிர்ப்புச் சட்டங்களையும் அல்லது இந்தக் கொள்கையை நேரடியாகவோ மறைமுகமாகவோ மீறக் கூடாது, அவர்கள் எந்த வடிவிலான லஞ்சமளிப்புக்கும் உதவுவதோ மறைப்பதோ அதில் மற்றபடி ஈடுபடுவதோ அனுமதிக்கப்படாது.

இந்தக் கொள்கையின் வேறு எந்தச் சட்டவிதியும் எவ்வாறு இருந்தாலும், அபின் பொருட்கள், அபின் தயாரிப்புகள், அபினால் ஏற்படுத்தப்படும் பக்கவிளைவுகளின் அல்லது வலிச் சிகிச்சையின் பயன்பாட்டுக்காகச் சுட்டப்படும் தயாரிப்புகள் ஆகியவை தொடர்பாக நிறுவனம் பின்பற்றச் சொந்த

விருப்பத்துடன் ஒப்புக்கொண்டுள்ள பற்றுறுதிகளுக்கு முரணாக நிறுவனம் எதுவும் செய்யாது, ஏனெனில் அந்தப் பதங்கள் அல்லது சொற்றொடர்கள் அபின் சார்ந்த பொருட்களுக்கான அறுதியீடு உடன்பாட்டுப் பற்றுறுதிகள் சட்டக் கொள்கையில் (Opioid Settlement Agreement Commitments Legal Policy) பயன்படுத்தப்படுகின்றன மற்றும்/அல்லது வரையறுக்கப்படுகின்றன.

பின்வரும் வழிகாட்டுக் கோட்பாடுகள் எல்லா Endo பணியாளர்களுக்கும் தொழில் கூட்டாளர்களுக்கும் பொருந்தும்:

- பொதுத் துறையோ அல்லது தனியார் துறையோ, எந்த வடிவிலான லஞ்சமளிப்பிலும் அல்லது ஊழலிலும் . ஈடுபட வேண்டாம்.
- வழிவகுப்புப் பணமளிப்புகளைச் செய்யாதீர்கள் அல்லது செய்ய அதிகாரம் அளிக்காதீர்கள்.
- எல்லாப் பரிவர்த்தனைகளையும் நியாயமாகவும் துல்லியமாகவும் பிரதிபலிக்கும் வகையில் கணக்குப் புத்தகங்களையும் பதிவுகளையும் வைத்திருங்கள்.
- லஞ்சமளிப்பும் ஊழலும் முறையான பணமளிப்புகளாக மறைக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள செயல்திறனுள்ள அகநிலைக் கட்டுப்பாடுகளை வைத்திருங்கள்.
- Endo-வின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்ற, முறைகேடு நிகழ்வதான தோற்றத்தைத் தவிர்க்கின்றன, Endo-வின் நற்பெயரைப் பாதுகாக்கின்ற அன்பளிப்புகள், கேளிக்கை, பயணம், மற்றும் விருந்தோம்பல்களை மட்டுமே வழங்குங்கள்.
- தொழில் கூட்டாளர்களைப் பரிசீலிக்கும்போதும் தேர்ந்தெடுக்கும்போதும் மற்றும் கண்காணிக்கும்போதும் விழிப்புடன் இருங்கள்.
- இந்தக் கொள்கை அல்லது எந்த ஊழல் எதிர்ப்புச் சட்டங்களின் அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் மீறல்கள் எவற்றையும் தெரிவியுங்கள்.

### 3.2 லஞ்சமளிப்பு மீதான தடைகள்

தொழில் வாய்ப்பைப் பெற அல்லது தக்கவைத்துக்கொள்ள ஓர் அரசு அதிகாரியின் அல்லது ஒரு தனிப்பட்ட நபரின்/அமைப்பின் நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்ற அல்லது அதற்கு வெகுமதியளிக்கின்ற நோக்கத்துடன் ஒரு லஞ்சத்தை அளிக்க முன்வருவதை, உறுதியளிப்பதை, கோருவதை, கொடுப்பதை அல்லது ஏற்பதை Endo சிறிதும் அனுமதிக்காது. இந்தத் தடையானது, Endo பணியாளர்கள் நேரடியாக அளிக்க முன்வரும் அல்லது செய்யும் பணமளிப்புகளுக்கு மட்டுமின்றி தொழில் கூட்டாளர்கள் மறைமுகமாகச் செய்யும் பணமளிப்புகளுக்கும் பொருந்தும்.

லஞ்சமளிப்பு பல வடிவங்களில் இருக்கக்கூடும். ரொக்கம் அல்லது அன்பளிப்புகளை வழங்குவதற்குக், கூடுதலாக, சொகுசுச் சாப்பாடு, குறிப்பிடத்தக்க தொழில்வணிக நோக்கம், கணிசமான ஓய்வுநேரத்தை அடக்கிய பயணம், ஓர் அரசு அதிகாரியால் அல்லது தொடர்புள்ள தரப்பால் கட்டுப்படுத்தப்படும் அமைப்புகளுக்கு ஈகை நன்கொடைகள் அளித்தல், வேலைவாய்ப்பு அல்லது மதிப்புள்ள பிறவற்றை அளித்தல் ஆகியவையும் அடங்கக்கூடும். தொழில் வாய்ப்பைத் தகாத முறையில் பெறுவதற்கான அல்லது தக்கவைத்துக்கொள்வதற்கான அனுமதிக்கப்படாத

செயல்களுக்குரிய எடுத்துக்காட்டுகளில், ஊழலான முறையில் தருவிப்பு நிகழ்முறையில் செல்வாக்கு செலுத்துதல், ஒழுங்குமுறைகளுக்கு விதிவிலக்குகளைப் பெறுதல், வரி அல்லது அபராத ஏய்ப்பு, தயாரிப்புகளை இறக்குமதி செய்வதற்குரிய விதிகளை வளைத்தல் முதலியவை அடங்கும்.

### 3.3 வழிவகுப்புப் பணமளிப்புகள் மீதான தடை

Endo பணியாளர்களும் மற்றும் தொழில் கூட்டாளர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வழிவகுப்புப் பணமளிப்புகளைச் செய்ய முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணமளிப்புகள் வழக்கமாகக் கீழ்மட்ட அதிகாரிகளால், சாதாரணமாகவும் பொதுவாகவும் அந்த அதிகாரியால் செய்யப்படும் ஒரு சேவையை வழங்குவதற்குப் பிரதியாகக் கோரப்படுகின்றன. வழிவகுப்பு அல்லது கையூட்டுப் பணமளிப்புகளுக்கான எல்லா வேண்டுகோள்களையும் அல்லது கோரிக்கைகளையும் பற்றிக் கூட்டாண்மை இணக்கத் துறைக்கு (Corporate Compliance Department) தெரிவிக்கப்பட வேண்டும்.

Endo பணியாளர்கள் அல்லது தொழில் கூட்டாளர்கள் தங்களுடைய அல்லது தங்கள் குடும்பத்தினருடைய உடல்நலத்திற்கு, பாதுகாப்புக்கு, அல்லது நல்வாழ்வுக்கு உள்ள ஓர் உடனடி அபாயத்தைத் தவிர்ப்பதற்காக எந்த நபருக்காவது கட்டாயத்தின்படி பணம் அளிக்க வேண்டியிருந்தால், அத்தகைய பணமளிப்புகள் நிறுவனத்தின் முன்னனுமதி இல்லாமல் செய்யப்படலாம், ஆனால் அவை உடனடியாக இணக்க மற்றும் சட்டத் துறைகளுக்கு தெரிவிக்கப்பட்டுத் தகுந்த முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

### 3.4 கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவுகளுக்கான தேவைப்பாடுகள்

Endo அதன் பரிவர்த்தனைகளையும் மற்றும் சொத்துக்களின் பயன்பாட்டையும் துல்லியமாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் கணக்குப் புத்தகங்கள், பதிவுகள், கணக்குகள் ஆகியவற்றைப் பராமரிக்க வேண்டும். போலியான பதிவுகளைத் தயாரிப்பது அல்லது தவறான உள்ளீடுகளை உருவாக்குவது சிறிதும் அனுமதிக்கப்படாது, அதன் விளைவாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் அதற்கு மேல் வேலைநீக்கம் அல்லது பணிநீக்கம் மேற்கொள்ளப்படலாம்.

Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் இந்தக் கொள்கை மற்றும் தொடர்புள்ள கொள்கைகளையும் தகுந்த அதிகாரமளிப்பு மற்றும் ஆதரவு ஆவணமாக்கத்துடன் மட்டுமே பணமளிப்புகள் நிகழும்படி வடிவமைக்கப்பட்டுள்ள செயல்முறைகளையும் பின்பற்ற வேண்டும். வெளித் தரப்புகளுக்குப் பணமளிப்புகள் செய்யப்படுவதற்கான தொழில் காரணங்களைப் பதிவுகள் போதுமான அளவு விவரமாகப் பிரதிபலிக்க வேண்டும் அதாவது அந்தச் செலவின் தேதி, நோக்கம், அதில் சம்பந்தப்பட்ட தனிநபர்கள், தொகை ஆகியவற்றை அடையாளம் காண உதவும் ஆவணம் நிறுவனம் வைதிருக்க வேண்டும். தொழில் கூட்டாளர்களால் Endo-வுக்கு வழங்கப்படும் எந்தப் பதிவுகளும் துல்லியமாகவும் நியாயமான அளவு விவரமாகவும் இருக்க வேண்டும் என்றும் Endo எதிர்பார்க்கிறது.

பின்வரும் செயல்கள் அனுமதிக்கப்படாத பதிவுப் பேணல் நடைமுறைகளுக்கான சில எடுத்துக்காட்டுகளாகும்:

- வேறொரு நபருக்கு அளிக்கப்பட்ட அல்லது அந்த நபருக்குரிய பணம் இன்னொரு நபருக்கு அளிக்கப்பட்டதாகத் தெரியும் வகையில் பதிவுகளை உருவாக்குதல்
- பொய்யான அல்லது துல்லியமற்ற செலவின அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- ஒரு பரிவர்த்தனையின், பணமளிப்பின் அல்லது செலவின் உண்மைத் தன்மையைத் துல்லியமின்றிச் சித்தரிக்கும் பதிவுகளை உருவாக்குதல் (எ.கா., ஒரு பணமளிப்பை "கமிஷன்" என்பதற்கு பதிலாக "மேற்செலவு" என்று பதிவு செய்தல்)
- நிறுவன நிதிகளைக் கொண்டு, வங்கிக் கணக்குகளை தனிநபர்களின் பெயர்களில் நிறுவுதல் அல்லது பராமரித்தல்
- ஒரு "கையூட்டு நிதி" மற்றும் பதிவு செய்யப்படாத ஒரு சில்லறை ரொக்கம் அல்லது "பிளாக் பாக்ஸ்" நிதி போன்ற எந்தப் பதிவு செய்யப்படாத Endo நிதியையும் அல்லது சொத்தையும் உருவாக்குதல் அல்லது பராமரித்தல்.
- Endo கணக்குப் புத்தகங்களில் பதிவுகளில் பொய்யான அல்லது துல்லியமற்ற உள்ளீடுகளைச் செய்தல் அல்லது அத்தகையதொரு பொய்யான அல்லது செயற்கையான உள்ளீட்டை விளைவிக்கும் அல்லது விளைவிக்க வாய்ப்புள்ள எந்த ஏற்பாட்டிலும் பங்கேற்றல்
- பணமளிப்புக்குரிய ஆவணங்களால் விவரிக்கப்படும் நோக்கம் அல்லாத பிற நோக்கத்திற்காக எந்தப் பணமளிப்புக்கும் ஒப்புதல் அளித்தல் எந்தப் பணமளிப்பையும் செய்தல்
- நிறுவன நிதிகளை அல்லது பிற சொத்துகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு சட்டவிரோத நோக்கத்திற்குப் பயன்படுத்துதல்
- செலவினங்களைக் கணக்குப் புத்தகங்களிலும் பதிவுகளிலும் பதிவுசெய்யத் தவறுதல்

மேலாண்மை மற்றும் நிதி சார்ந்த பொறுப்புகள் கொண்ட Endo பணியாளர்கள், அவர்களது அகநிலைக் கட்டுப்பாட்டு அமைப்புகள் யாவும் நிறுவனத்தின் தரநிலைகள் மற்றும் கொள்கைகளுக்கு இணக்கமாக உள்ளனவா என்று சீரான இடைவேளைகளில் ஆய்வு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.5 அன்பளிப்புகள், விருந்தோம்பல், கேளிக்கை, மற்றும் பயணம்

அன்பளிப்புகள், விருந்தோம்பல், கேளிக்கை, **மற்றும்** பயணம் ஆகியவை (கூட்டாக, "தொழில் மரியாதைகள்") பல சந்தர்ப்பங்களில் பொருத்தமானவையாக இருக்கலாம், ஆனால் அவை ஒருபோதும் முறையற்ற சாதகநிலையைப் பெறுவதற்காக அல்லது அலுவல் சார்ந்த நடவடிக்கையில் செல்வாக்கு செலுத்துவதற்காக அளிப்பதாகக் கூறப்படவோ வழங்கப்படவோ கூடாது. முறைகேடாக இருக்கும் தோற்றத்தைக்கூடத் தவிர்ப்பதற்காக, எல்லா தொழில் மரியாதைகளும் கட்டாயமாக:

- எல்லா பொருந்தும் சட்டங்கள், Endo கொள்கைகள் ஆகியவற்றாலும் அனுமதிக்கப்பட

வேண்டும், மரபு வழக்கான தொழில் நடைமுறைகளுடன் ஒத்துப்போகின்றவையாக இருக்க வேண்டும்.

- நிறுவனத்தின் வர்த்தகத்தை அல்லது தொழில்வணிகத்தை நடத்துவதுடன் நேரடித் தொடர்பு அல்லது பிணைப்பு இருக்க வேண்டும்.
- சட்டவிரோதமானவை அல்லது முறைகேடானவை என்று கருதப்படாத அளவுக்கு நியாயமானதாக, அடக்கமாக, அரிதாக இருக்க வேண்டும், பகிரங்கமாகத் தெரியவந்தால் நிறுவனத்திற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது.
- நேர்மையான நோக்கத்தோடும் முறையானதொரு தொழில்வணிக நோக்கம் தொடர்பாகவும் வழங்கப்பட வேண்டும்.
- தகுந்த ஆவணமாக்கத்துடன் வழங்கப்பட வேண்டும், நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களிலும் பதிவுகளிலும் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

தொழில் மரியாதைகள் அளிக்கப்படும் எல்லாச் சூழ்நிலைகளிலும் இயல்பறிவும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். ரொக்கமாக அல்லது ரொக்கத்திற்கு நிகரானவற்றைக் கொடுப்பதும், அதோடு அளவுக்கதிகமான அல்லது ஆடம்பரமான தொழில் மரியாதைகளும் சிறிதும் அனுமதிக்கப்படாது.

நிறுவனத்தின் ***நலம்பேணல் நிபுணர்களுடனான (Healthcare Professionals - HCP-கள்) ஊடாடல்கள் கொள்கை***யில் ***(Interactions with Healthcare Professionals (HCPs) Policy)*** விளக்கப்பட்டுள்ளபடி HCP-களுக்கு அன்பளிப்புகளோ கேளிக்கையோ அளிப்பதாகக் கூறவோ வழங்கவோ கூடாது. நோய் அல்லது சிகிச்சை சார்ந்த கல்விக்காக மட்டுமே அல்லாத எந்தப் பொருளையும் - பேனாக்கள், குறிப்பேடுகள், கோப்பைகள், அல்லது கோப்பைகள் போன்ற மிகக் குறைந்த மதிப்புள்ள பொருட்களைக்கூட - ஒரு HCP-க்கு வழங்குவதை Endo அனுமதிக்காது.

Endo பணியாளர்கள் ***பயண மற்றும் செலவினக் கொள்கையின்படி (Travel & Expense Policy)*** தொழில் மரியாதைச் செலவுகளுக்காக, எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தமது நிறுவனம் சார்ந்த பயண மற்றும் செலவின அட்டையைப் பயன்படுத்த வேண்டும். தொழில் மரியாதைச் செலவினங்களுக்கு இழப்பீடு பெற, Endo பணியாளர்கள் தேதி, நேரம், இடம், தன்மை, மற்றும் பங்கேற்பாளர்கள் மற்றும் பலன்பெறுநர்களின் பெயர்கள்/அழைப்புமுறைகள்/அவர்கள் வேலைசெய்யும் நிறுவனங்கள், அதோடு ஒவ்வொரு செலவினத்திற்குமான தொழில்வணிக நோக்கங்கள் ஆகியவை உள்படத் தொழில் மரியாதைச் செலவினங்களுக்கான அடிப்படைத் தகவல்களை அளிக்க வேண்டும்.

சப்ளையர்கள், விற்பனையாளர்கள், அல்லது நிறுவனத்திற்கு வெளியில் உள்ள மற்றவர்களிடமிருந்து கேளிக்கை, பயணம் அல்லது வழக்கத்திலிருந்து மாறுபட்ட எந்த அன்பளிப்புகளையும் ஏற்பதற்கு முன்பு, Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் ***நலன் முரண்பாட்டுக் கொள்கை***யை ***(Conflict-of-Interest Policy)*** பரிசீலிக்க வேண்டும் அல்லது கூட்டாண்மை இணக்கத் துறையிடம் ஆலோசனை பெற வேண்டும்.

### 3.6 அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பங்களிப்புகள்

Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் சட்டத் துறையால் (Legal Department) முன்னதாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் தவிர நிறுவனத் தொழில் தொடர்பான விஷயங்கள் குறித்த சட்டம் அல்லது பிற கொள்கை முடிவுகள் தொடர்பாக அரசு அதிகாரிகளிடம் ஆதரவு நாடுதல், அவர்களுக்கு அன்பளிப்புகள் அளித்தல், அல்லது பிற வகையில் அவர்களது நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்த முயலுதல் ஆகியவற்றைச் செய்யக் கூடாது. அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பங்களிப்புகள் தொடர்பாக நிறுவனத்திற்கு உள்ள எதிர்பார்ப்புகளுக்கு தயவுசெய்து ***Endo-வின் நடத்தை நெறி***யை ***(Endo's Code of Conduct)*** மீள்பார்வையிடுங்கள்.

### 3.7 ஈகை நன்கொடைகள் மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்புப் பங்களிப்புகள்

Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் நிறுவனத் தொழில் தொடர்பாக பெறுநரிடம் ஊழலான முறையில் செல்வாக்கு செலுத்தும் நோக்கத்துடன் ஓர் ஈகை நன்கொடையை ஒருபோதும் வழங்கக் கூடாது. Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் நிறுவனத்தின் சார்பாக எந்த ஈகை நன்கொடையையும் வழங்குவதற்கு அல்லது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு ("Corporate Social Responsibility - CSR") பங்களிப்பையும் செய்வதற்கு முன்பு அல்லது அவ்வாறு செய்ய ஒப்புக்கொள்ளும் முன்பு தங்கள் பிராந்தியத்திற்கான பொருந்தும் கொள்கையை மீள்பார்வையிட வேண்டும், உள்ளூர் ஒப்புதல் நிகழ்முறையைப் பின்பற்ற வேண்டும்.

### 3.8 கல்வி/ஆராய்ச்சி நல்கைகள்

ஈகை நன்கொடைகளைப் போலக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நல்கைகளுக்கும் முறையான காரணங்கள் உள்ளன என்றாலும், இத்தகைய பணமளிப்புகள் ஊழல் எதிர்ப்பு அபாயங்கள் எழக் காரணமாகலாம். எனவே, தன்னிச்சையான மருத்துவக் கல்வி அல்லது ஆராய்ச்சி நல்கைகள் முறையான நோக்கங்களுக்காக மட்டுமே வழங்கப்பட வேண்டும்; அவை Endo தயாரிப்புகளைப் பரிந்துரைக்க, ஊக்கப்படுத்த, அல்லது வலியுறுத்த, அல்லது Endo-வுக்கு எந்த முறையற்ற தொழில் சாதகநிலையையும் பெறுவதற்குத் தூண்டுதலாக ஒருபோதும் பயன்படுத்தப்படக் கூடாது. Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் அமெரிக்காவில் நல்கைகள் வழங்கும்போது ***தன்னிச்சை மருத்துவக் கல்வி நல்கைகள் கொள்கை***க்கு ***(Independent Medical Education Grants Policy)*** இணங்க வேண்டும்; ஒரு நல்கையை வழங்கும்படி உங்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தால் அல்லது அமெரிக்காவுக்கு வெளியே ஒரு நல்கையை வழங்குவது பற்றிப் பரிசீலிக்கிறீர்கள் என்றால் இணக்க மற்றும் மருத்துவ விவகாரங்கள் (Medical Affairs) துறைகளிடம் ஆலோசனை பெற வேண்டும்.

### 3.9 தொழில் கூட்டாளர்களை நியமித்தல்

பின்வரும் தேவைப்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே Endo ஒரு தொழில் கூட்டாளரை நியமிக்கலாம்:

- அவர்கள் வழங்கும் சேவைகளுக்கு அல்லது சரக்குகளுக்கு முறையான தேவை இருந்தால்
- அந்தச் சேவைகள் அல்லது சரக்குகளுக்கு நியாயமான சந்தை மதிப்பின்படி விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தால்
- தொழில் கூட்டாளர் தகுதிபெற்ற, நற்பெயர் உள்ள, Endo-வுடன் தொழில் நடத்துவதற்குத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட நிறுவனமாக இருந்தால்
- வெளித் தரப்புத் தொழில் உறவுக்கும் பரிவர்த்தனைகளுக்கும் ***ஒப்பந்தங்கள் மேலாண்மைக் கொள்கை***யின்படி ***(Contracts Management Policy)*** ஓர் எழுத்துமூலமான ஒப்பந்தத்தில் அல்லது அதே விளைவுடன் (எ.கா., கொள்முதல் ஆணை) பிற எழுத்துமூலமான ஆவணத்தில் நினைவுப்பதிவு உருவாக்கப்பட்டிருந்தால்
- தொழில் கூட்டாளர்கள் தங்கள் சொந்த வெளித் தரப்புகளை அல்லது Endo-வின் சார்பாகப் பணிபுரியப்போகும் துணை ஒப்பந்ததாரர்களை நியமிக்கும்போது அதே போன்ற தேவைப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்

Endo-வின் சார்பாகச் செயல்படும் குறிப்பிட்ட சில வெளித் தரப்புகளால் ("வெளித் தரப்பு இடையாளர்கள்" (Third Party Intermediaries) அல்லது "TPI" என்று குறிப்பிடப்படுவோர்) <u>குறிப்பிட்ட ஓர் அளவிலான லஞ்சமளிப்பு அபாயம் ஏற்படலாம்</u>, அவர்களுக்குக் கூடுதலான உரிய கவனமும் கூட்டாண்மை இணக்கமும் தேவைப்படும். ஒரு தொழில் கூட்டாளருக்குப் பின்வரும் தகுதிகள் இருந்தால் அவர்கள் <u>TPI என்று கருதப்படுகிறார்கள்</u>:

1) 61-க்குக் குறைவான ஊழல் பார்வைக் குறியீட்டெண்ணை (Corruption Perception Index - CPI) கொண்ட நாடுகளில் நிறுவனத்தின் சார்பாகச் செயல்படுகிறார்கள் (பார்க்க: ***பின்னிணைப்பு அ: நாடுகளின் CPI மதிப்பெண்கள்***)

    <u>அத்துடன்</u>

2) பின்வரும் வகைப்பாடுகளில் ஒன்றில் பொருந்துகிறார்கள்:

| நடவடிக்கை | எடுத்துக்காட்டு(கள்) |
|---|---|
| மருத்துவ அல்லது நோயாளி சமூகத்தின் எந்த உறுப்பினரும் | HCP/HCO, மருத்துவர், மருத்துவத் தொழிற்பயிற்சியாளர், நோயாளிகள் சங்கம், HCP சங்கம் |
| அரசு அதிகாரிகள், HCP-கள் அல்லது HCO-க்களுடன் ஊடாடுவது அடங்கிய தொழில்முறை அல்லது பிற சேவைகளை Endo-வின் சார்பாக வழங்குதல் | சட்ட, வரி அல்லது கணக்குப்பதிவு அறிவுரையாளர் அல்லது ஆலோசகர் |
| தேவையை உருவாக்குவதன் மூலம் மற்றும்/அல்லது செயலூக்கமுள்ள ஊக்கப்படுத்துதலின் மூலம் Endo தயாரிப்புகளை விற்றல் அல்லது மறுவிற்பனை செய்தல் | விநியோக நிறுவனங்கள், விற்பனை முகவர்கள் |
| Endo தயாரிப்புகள் அல்லது தொழில் தொடர்பான ஒப்பந்தப்புள்ளியில் அல்லது ஏலமெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் | விநியோக நிறுவனங்கள், விற்பனை முகவர்கள் |
| அனுமதிகள், உரிமங்கள், கடவுச்சீட்டுகள் அல்லது சுங்க அனுமதி அல்லது ஒழுங்குமுறை ஒப்புதல்கள் பெற அரசு முகமைகளுடன் ஊடாடுதல் | பொது ஒப்பந்ததாரர், ஒழுங்குமுறை ஆலோசகர், சந்தைப்படுத்தல் முகமை |
| Endo-வின் சார்பில் நலம்பேணல் நிபுணர்களுக்காக (HCP-கள்) அல்லது நலம்பேணல் அமைப்புகளுக்காக (HCO-க்கள்) அல்லது அரசு அதிகாரிகளுக்காகப் பயணங்களை அல்லது நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல் | பயண முகமை |
| மருத்துவ ஆய்வுப் பணி தொடர்பாகச் சேவைகள் வழங்குதல் | மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, மருத்துவமனை |

ஒப்பந்தத்துடன் அல்லது உடன்பாட்டுடன் இணக்கம் இருப்பதை உறுதிப்படுத்த, ***வெளித் தரப்பு இடையாளர்களை நியமிப்பதற்கான SOP***-இல் ***(Engaging Third-Party Intermediaries SOP)*** உள்ள தேவைப்பாடுகள் நியமன காலம் முழுவதும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு TPI-களை மேற்பார்வை செய்யும் Endo பணியாளர்களுக்கு உள்ளது; உரிய கவனச் செயல்முறைகள், தற்போது நடைபெறும் கண்காணிப்பு ஆகியவையும் இத்தேவைப்பாடுகளில் அடங்கும்.

### 3.10 தொழில் கூட்டாளர்களைக் கண்காணித்தல்

இக்கொள்கையின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்த Endo எல்லா தொழில் கூட்டாளர்களையும் மேற்பார்வையிடும். ஒரு தொழில் கூட்டாளர் தவறான நடத்தையில் ஈடுபட்டார் அல்லது ஈடுபடலாம் என்று சுட்டிக்காட்டும் பின்வரும் காரணிகளில் எதுவும் கூட்டாண்மை இணக்கத் துறைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்; இது அவர்கள் முறையாக மதிப்பாய்வு செய்யப்பட்டு அவர்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட உதவும்.

- அளவுக்கதிகமான தொகையுடன் அல்லது ஒழுங்கற்று இன்வாய்ஸ் தயாரித்தல்
- பணமளிப்பை ரொக்கமாகத் தரக் கோருதல்
- வழக்கத்திற்கு மாறாக மிக அதிகமான கமிஷன்கள், அல்லது அசாதாரணமான அளவு

அல்லது சிறப்புத் தள்ளுபடிகள் தரக் கோருதல்

- வழக்கத்திற்கு மாறான அல்லது சான்றுகள் இன்றி செலவின இழப்பீடுகள் கோருதல்
- மோசமான அல்லது நம்பகமற்ற ஆவணமாக்கம் அல்லது கணக்குப்பதிவில் வெளிப்படைத்தன்மை இல்லாமை
- Endo தொழில் கூட்டாளர் அமைந்துள்ள அல்லது நடவடிக்கைகளை நிகழ்த்துவதாக எதிர்பார்க்கப்படும் நாட்டுக்கு வெளியில் உள்ள சட்ட அமைப்புகள் அல்லது வங்கிக் கணக்குகள் வழியாகப் பணம் செலுத்தும்படி கோருதல்

### 3.11 தொழில் கூட்டாளர்களுக்குத் தள்ளுபடிகளும் இலவசத் தயாரிப்பும் வழங்குதல்

எல்லா தள்ளுபடிகளும் கழிவுகளும் மற்றும்/அல்லது இலவசச் சரக்குகளும் ஆவணமாக்கத்தின் அடிப்படையில் அளிக்கப்பட வேண்டும், பொருந்தும் நிதி மற்றும் கணக்குப்பதிவுக் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளின்படி Endo-வின் கணக்குப் புத்தகங்களிலும் பதிவுகளிலும் நியாயமான அளவுக்கு விவரமாகத் துல்லியமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். சிறப்பு விலைகள், கழிவுகள், தள்ளுபடிகள், மற்றும்/அல்லது இலவசத் தயாரிப்புகள் (எ.கா., தயாரிப்பு மாதிரிகள்) ஒருபோதும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஓர் அரசு அதிகாரிக்கு அல்லது ஒரு தனித் தரப்புக்கு முறையற்ற நோக்கங்களுக்காக அளிப்பதாகக் கூறப்படவோ வழங்கப்படவோ கூடாது.

### 3.12 மீறல்களைத் தெரிவித்தல்

இந்தக் கொள்கை, பிற Endo கொள்கைகள் அல்லது எந்தப் பொருந்தும் சட்டங்களின் எந்த மீறல்களும் உட்பட எந்த அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் முறையற்ற நடவடிக்கைகளையும் Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் தெரிவிக்க வேண்டும். ஒரு கவலையைத் தெரிவிக்க உங்கள் மேலாளர், இணக்கத் துறை, சட்டத் துறை, அல்லது மனிதவளத் துறையைத் தொடர்பு கொள்ளுங்கள். கவலைகளைப் பெயர் கூறாமல் Endo-வின் அறத் தொலைபேசி உதவிச் சேவை (Ethics Hotline) மூலம் தொலைபேசியில் 1-800-305-1563 என்ற எண்ணில் அல்லது இணையத்தில் www.endo.ethicspoint.com என்ற முகவரியில் தெரிவிக்கலாம்.

ஒரு கவலையை அல்லது சந்தேகிக்கப்படும் மீறலை - அது ஆதாரமற்றதாகக் கண்டுபிடிக்கப்படும்போதுகூட - நேர்மையான நோக்கத்துடன் தெரிவிக்கின்ற அல்லது எதிர்பார்க்கப்படும் நடவடிக்கையின் பொருத்தமான தன்மை குறித்து விசாரிக்கின்ற ஒருவருக்கு பதிலடி கொடுப்பதை Endo சகித்துக்கொள்ளாது.

முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை முழுமையாகவும் உரிய நேரத்திலும் புலனாய்வு செய்வதில் Endo பற்றுறுதி கொண்டுள்ளது, அது தகுந்த நடவடிக்கையை அதன்படி மேற்கொள்ளும். எந்த நிறுவன தணிக்கைகள் அல்லது புலனாய்வுகளுக்கும் Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

### 3.13 இணக்கமின்மையின் பின்விளைவுகள்

ஊழல் எதிர்ப்புச் சட்டங்களின் மீறல்கள் Endo-வுக்கு மட்டுமின்றி சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கும்

கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்; இவற்றில் கணிசமான அபராதங்கள், தவறான நடத்தையுடன் தொடர்புள்ள லாபங்களைத் திருப்பித் தருதல், சிறை ஆகியவையும் அடங்கும். நிறுவனங்கள் இச்சட்டங்களின் மீறல்களில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டால், அவை அரசுடன் தொழில் நடத்தத் தடை செய்யப்படலாம். இந்தக் கொள்கைக்கு அல்லது இத்துடன் தொடர்புடைய செயல்முறைகளுக்கு இணங்கத் தவறுவது ஒழுங்கு நடவடிக்கைக்கு வித்திடலாம்; இதில் வேலைநீக்கம் வரையிலும் வேலைநீக்கம் உட்படவும் இருக்கலாம், Endo பணியாளர்கள் அல்லது தொழில் கூட்டாளர்கள் குடிமைப் பொறுப்பேற்புக்கு அல்லது குற்ற வழக்குத்தொடர்வுக்குத் தாக்கமுறலாம்.

### 3.14 கேள்விகளும் கவலைகளும்

வெளிப்படையான பேச்சுவார்த்தை நமது இணக்க முயற்சியின் முக்கியமான ஒரு பகுதியாகும். Endo பணியாளர்களும் தொழில் கூட்டாளர்களும் எந்தக் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தாலும் கூட்டாண்மை இணக்கத் துறையைத் தொடர்பு கொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## 4. சொற்சுருக்கங்களும் வரையறைகளும்

| | |
|---|---|
| ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் | FCPA, UKBA, மற்றும் Endo தொழில் செய்யும் நாடுகளின் பிற லஞ்சமளிப்பு எதிர்ப்பு மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள். |
| மதிப்புள்ள எதுவும் | பெறுநருக்குக் கிடைக்கும் தொட்டுணரத்தக்க அல்லது தொட்டுணரவியலாத எந்த வகையான பலனும்; இதில் ரொக்கம், ரொக்கத்திற்கு நிகரானவை (எ.கா., அன்பளிப்புச் சான்றிதழ்கள், கடன்கள், பங்குகள்), சாப்பாடு, கேளிக்கை, பயணம், அன்பளிப்புகள், தயாரிப்புகளிலும் சேவைகளிலும் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்காத தள்ளுபடிகள், இலவச தயாரிப்பு மாதிரிகள், வேலைவாய்ப்பு அல்லது பணிக் கல்வி அளிப்பதாகக் கூறுதல், அரசியல் பங்களிப்புகள், ஈகை நன்கொடைகள், கடனை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது தள்ளுபடி செய்தல் ஆகியவையும் அடங்கும். |
| லஞ்சமளிப்பு | தகாத எந்த வெகுமதியும், சாதக நிலையும், அல்லது பலனும்; இதில் மதிப்புள்ள எதுவும்கூட அடங்கலாம். |
| தொழில் மரியாதை | Endo-வின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விளம்பரம், செயல்விளக்கம், அல்லது விளக்கத்துடன் நேரடித் தொடர்புள்ள எந்த அன்பளிப்பும், விருந்தோம்பலும் அல்லது கேளிக்கையும். |
| அறத் துறைக்கான நேரடித் தொலைபேசி | சட்டத்தின் அல்லது நிறுவனத்தின் கொள்கைகளை உண்மையாக அல்லது சாத்தியமாக மீறுவது உட்பட இணக்கம் தொடர்பான பிரச்சினைகளை அல்லது கவலைகளைப் பெயர் கூறாமல் தெரிவிப்பதற்கான வளம். தெரிவிப்புகள் இணையத்திலோ, தொலைபேசி மூலமோ செய்யப்படலாம். |

| | |
|---|---|
| வழிவகுப்புப் பணமளிப்பு | “வழிவகுப்புப் பணமளிப்பு” என்பது ஓர் அரசு அதிகாரி தமது பணியின் பகுதியாக வழக்கமாகச் செய்ய வேண்டியுள்ள ஒரு வாடிக்கையான, விருப்புரிமை சாராத ஓர் அரசுப் பணியை விரைவாக்க அல்லது உறுதிப்படுத்த ஓர் அரசு அதிகாரிக்கு அளிக்கப்படும் சிறிய தொகை ஆகும். வழிவகுப்புப் பணமளிப்புகளுக்கான எடுத்துக்காட்டுகளில், தயாரிப்புகளை சுங்கம் மூலமாக நிகழ்முறைப்படுத்துவதை விரைவாக்குவதற்குப் பணமளிப்பதும் அடங்கும். |
| அரசு அமைப்பு | அரசுக்குச் சொந்தமான மற்றும்/அல்லது அரசால் கட்டுப்படுத்தப்படும் மருத்துவமனைகள், பல்கலைக்கழகங்கள், பயன்பாட்டு வழங்குநர்கள் போன்ற அரசுக்குச் சொந்தமான மற்றும் அரசால் நடத்தப்படும் அமைப்புகள். இந்தக் கொள்கையின் நோக்கங்களுக்காக, ஓர் அரசு அமைப்பின் எல்லாப் பணியாளர்களும் அரசு அதிகாரிகளாகக் கருதப்படுகிறார்கள். |
| அரசு அதிகாரி | (i) அரசின் எந்த சட்டமன்ற, மேலாண்மை, நிர்வாக, அல்லது நீதிப் பிரிவின் அதிகாரிகள் யாரும்; (ii) ஓர் அரசியல் கட்சியின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், அரசியல் பதவிக்கான வேட்பாளர்கள் ஆகிய யாரும்; (iii) ஒரு நாட்டுக்காக அல்லது அந்த நாட்டின் சார்பாக அல்லது அந்த நாட்டின் எந்தப் பொது முகமைக்காகவும் அல்லது பொது நிறுவனத்திற்காகவும் ஒரு பொதுச் செயல்பாட்டை நிகழ்த்தும் தனிநபர்கள் யாரும்; (iv) அரசுத் துணையமைப்புகளின் அதிகாரிகள் அல்லது பணியாளர்கள் யாரும்; (v) பொது சர்வதேச அமைப்புகளின் அல்லது அவற்றின் எந்தத் துறையின் அல்லது முகமையின் (எ.கா., ஐக்கிய நாடுகள் அமைப்பு (United Nations), உலக வங்கி (World Bank), IMF) அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் யாரும் ; (vi) அரசுசார் கடமைகளைக் கொண்ட வெளிநாட்டு அரசக் குடும்பங்களின் உறுப்பினர்கள் யாரும்; (vii) இத்தகைய நபர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற, அல்லது இவர்கள் சார்பாக அல்லது இவர்களுக்காக அதிகாரபூர்வமாகச் செயல்படுகின்ற இவர்களுடைய ஆலோசகர்கள், அறிவுரையாளர்கள், அல்லது முகவர்கள் யாரும்; (viii) மேற்கண்ட எந்த நபர்களின் நெருங்கிய உறவினர்கள் யாரும். “அரசு அதிகாரி” என்ற சொல் பரந்துபட்ட அளவில் வரையறுக்கப்படுகிறது; HCP-கள் போல அரசுக்குச் சொந்தமான அல்லது அரசின் நிதியில் இயங்கும் அமைப்புகளின் பணியாளர்கள் உட்பட அரசின் எல்லா வடிவங்களிலும் நிலைகளிலும் உள்ள தனிநபர்களையும், அதோடு அவற்றின் சார்பாகச் செயல்படும் வெளித் தரப்புகளையும் உள்ளடக்குகிறது. “அரசு” என்ற சொல், தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் அலுவலகங்கள் உள்ளிட்ட அரசின் எல்லா நிலைகளையும் குறிக்கிறது. |

| | |
|---|---|
| நலம்பேணல் நிபுணர் (Healthcare Professional - HCP) | நலம்பேணல் நிபுணர் என்பவர் தமது தொழில்முறை நடவடிக்கைகளின் போக்கில் மருந்துத் தயாரிப்புகளை அல்லது மருத்துவச் சாதனங்களைப் பரிந்துரைக்கக்கூடிய, பயன்படுத்துமாறு சிபாரிசு செய்யக்கூடிய, வாங்கக்கூடிய, குத்தகைக்கு விடக்கூடிய, சப்ளை செய்யக்கூடிய, பயன்படுத்தக்கூடிய அல்லது மருந்தாகச் செலுத்தக்கூடிய மருத்துவ, பல் மருத்துவ, மருந்தக அல்லது செவிலித் தொழிலைச் சேர்ந்த எந்தப் பணியாளரும் ஆவார். |
| வெளித் தரப்பு இடையாளர் (Third-Party Intermediary - TPI) | Endo-வின் சார்பாகச் செயல்படுகின்ற, தங்கள் நடவடிக்கையின் தன்மை காரணமாக ஒரு குறிப்பிட்ட அளவிலான லஞ்சமளிப்பு அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நபர் அல்லது சட்டபூர்வ அமைப்பு. |

## 5. குறிப்பீடுகள் மற்றும் தொடர்பான ஆவணங்கள

- வெளித் தரப்பு இடையாளர் நியமன நிகழ்முறை SOP (VV-POL-00xxx)
- நடத்தை நெறி (Code of Conduct)
- நலன் முரண்பாட்டுக் கொள்கை (Conflict of Interest Policy)
- பயண மற்றும் செலவுக் கொள்கை (Travel and Expense Policy)
- நலம்பேணல் நிபுணர்களுடனான (HCP-கள்) உலகளாவிய ஊடாடல்கள் கொள்கை (Global Interactions with Healthcare Professionals (HCPs) Policy)
- தன்னிச்சை மருத்துவக் கல்வி நல்கைகள் கொள்கை (Independent Medical Education Grants Policy)
- இந்தியா அன்பளிப்புகள் SOP
- கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) கொள்கை (Corporate Social Responsibility (CSR) Policy)
- ஈகைப் பங்களிப்புகள் கொள்கை (Charitable Contributions Policy)
- அபின் சார்ந்த பொருட்களுக்கான அறுதியீடு உடன்பாட்டுப் பற்றுறுதிகள் சட்டக் கொள்கை

## 6. ஆவண வரலாறு மற்றும் வடிவக் கட்டுப்பாடு

| வடிவம் | தேதி | ஆக்குநர் | மாற்றங்கள் குறித்த விளக்கம் |
|---|---|---|---|
| 1.0 | 10மே2023 | ஆல்கா ஜினவெங்க்கா (Olga Zinavenka)<br>ஹெதர் பாரெட் (Heather Barrett) | புதிய உலகளாவிய கொள்கை. CORP-CC-POL-00012-ஐ மாற்றீடு செய்கிறது. எளிமைப்படுத்தப்பட்ட மொழி, தெளிவாக்கம் மற்றும் கோட்பாட்டு அடிப்படையிலான கட்டமைப்பு. |

## பிற்சேர்க்கை அ: நாடுகளின் CPI மதிப்பெண்கள்[1]

61-க்குக் குறைவான CPI-களைக் கொண்ட நாடுகளில் உள்ள அல்லது பட்டியலிடப்படாத ஒரு நாட்டில் பணி செய்யும் TPI-கள் கூடுதல் உரிய கவனத்துக்கும் கூட்டாண்மை இணக்கத் துறையின் ஒப்புதலுக்கும் உட்பட்டவர்கள்.

| நாடு | CPI மதிப்பெண் |
|---|---|
| ஆப்கானிஸ்தான் | 24 |
| அல்பேனியா | 36 |
| அல்ஜீரியா | 33 |
| அங்கோலா | 33 |
| அர்ஜென்டினா | 38 |
| ஆர்மேனியா | 46 |
| ஆஸ்திரேலியா | 75 |
| ஆஸ்திரியா | 71 |
| அஜர்பைஜான் | 23 |
| பஹாமாஸ் | 64 |
| பஹ்ரைன் | 44 |
| பங்களாதேஷ் | 25 |
| பார்படோஸ் | 65 |
| பெலாருஸ் | 39 |
| பெல்ஜியம் | 73 |
| பெனின் | 43 |
| பூடான் | 68 |
| பொலிவியா | 31 |
| போஸ்னியா மற்றும் ஹெர்செகோவினா | 34 |
| போட்ஸ்வானா | 60 |
| பிரேசில் | 38 |
| பல்கேரியா | 43 |
| பர்க்கினா ஃபாசோ | 42 |
| புருண்டி | 17 |
| காபோ வெர்டே | 60 |
| கம்போடியா | 24 |
| கேமரூன் | 26 |
| கனடா | 74 |
| மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு | 24 |
| சாட் | 19 |
| சிலி | 67 |
| சீனா | 45 |
| கொலம்பியா | 39 |
| கொமோரோஸ் | 19 |
| காங்கோ | 21 |
| கோஸ்டா ரிக்கா | 54 |
| கோட் டிவார் | 37 |
| குரோயேஷியா | 50 |
| க்யூபா | 45 |
| சைப்ரஸ் | 52 |
| செக்கியா | 56 |

| நாடு | CPI மதிப்பெண் |
|---|---|
| டொமினிகன் குடியரசு | 32 |
| எக்வடோர் | 36 |
| எகிப்து | 30 |
| எல் சால்வடோர் | 33 |
| எக்வட்டோரியல் கினி | 17 |
| எரிட்ரியா | 22 |
| எஸ்டோனியா | 74 |
| எஸ்வாட்டினி | 30 |
| எத்தியோப்பியா | 38 |
| ஃபிஜி | 53 |
| பின்லாந்து | 87 |
| பிரான்ஸ் | 72 |
| கேபன் | 29 |
| கேம்பியா | 34 |
| ஜார்ஜியா | 56 |
| ஜெர்மனி | 79 |
| கானா | 43 |
| கிரீஸ் | 52 |
| கிரெனடா | 52 |
| குவாதமாலா | 24 |
| கினி | 25 |
| கினி-பிசாவ் | 21 |
| கயானா | 40 |
| ஹைட்டி | 17 |
| ஹோண்டுராஸ் | 23 |
| ஹாங்காங் | 76 |
| ஹங்கேரி | 42 |
| ஐஸ்லாந்து | 74 |
| இந்தியா | 40 |
| இந்தோனேசியா | 34 |
| ஈரான் | 25 |
| ஈராக் | 23 |
| அயர்லாந்து | 77 |
| இஸ்ரேல் | 63 |
| இத்தாலி | 56 |
| ஜமைக்கா | 44 |
| ஜப்பான் | 73 |
| ஜோர்டான் | 47 |
| கசாக்ஸ்தான் | 36 |
| கென்யா | 32 |
| கொசோவோ | 41 |

| நாடு | CPI மதிப்பெண் |
|---|---|
| லெபனான் | 24 |
| லெசோத்தோ | 37 |
| லைபீரியா | 26 |
| லிபியா | 17 |
| லித்துவேனியா | 62 |
| லக்சம்பர்க் | 77 |
| மடகாஸ்கர் | 26 |
| மலாவி | 34 |
| மலேசியா | 47 |
| மாலத்தீவுகள் | 40 |
| மாலி | 28 |
| மால்டா | 51 |
| மௌரிட்டானியா | 30 |
| மொரீஷியஸ் | 50 |
| மெக்சிகோ | 31 |
| மோல்டோவா | 39 |
| மங்கோலியா | 33 |
| மான்டிநெக்ரோ | 45 |
| மொராக்கோ | 38 |
| மொசாம்பிக் | 26 |
| மியான்மர் | 23 |
| நமீபியா | 49 |
| நேபாளம் | 34 |
| நெதர்லாந்து | 80 |
| நியூசிலாந்து | 87 |
| நிகராகுவா | 19 |
| நைஜர் | 32 |
| நைஜீரியா | 24 |
| வட கொரியா | 17 |
| வடக்கு மாசிடோனியா | 40 |
| நார்வே | 84 |
| ஓமான் | 44 |
| பாகிஸ்தான் | 27 |
| பனாமா | 36 |
| பப்புவா நியூ கினி | 30 |
| பராகுவே | 28 |
| பெரு | 36 |
| பிலிப்பைன்ஸ் | 33 |
| போலந்து | 55 |
| போர்ச்சுகல் | 62 |
| கத்தார் | 58 |

| நாடு | CPI மதிப்பெண் |
|---|---|
| செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனடீன் தீவுகள் | 60 |
| சாவோ டோமே மற்றும் ப்ரின்சிப்பே 65 | 45 |
| சவூதி அரேபியா | 51 |
| செனகல் | 43 |
| செர்பியா | 36 |
| செஷல்ஸ் | 70 |
| சியரா லியோனே | 34 |
| சிங்கப்பூர் | 83 |
| ஸ்லோவாக்கியா | 53 |
| ஸ்லோவேனியா | 56 |
| சாலமன் தீவுகள் | 42 |
| சோமாலியா | 12 |
| தென்னாப்பிரிக்கா | 43 |
| தென் கொரியா | 63 |
| தெற்கு சூடான் | 13 |
| ஸ்பெயின் | 60 |
| இலங்கை | 36 |
| சூடான் | 22 |
| சுரினாம் | 40 |
| ஸ்வீடன் | 83 |
| ஸ்விட்சர்லாந்து | 82 |
| சிரியா | 13 |
| தைவான் | 68 |
| தஜிக்கிஸ்தான் | 24 |
| தான்சானியா | 38 |
| தாய்லாந்து | 36 |
| திமோர்-லெஸ்த்தே | 42 |
| டோகோ | 30 |
| ட்ரினிடாட் மற்றும் டொபேகோ | 42 |
| துனீசியா | 40 |
| துருக்கி | 36 |
| துர்க்மெனிஸ்தான் | 19 |
| உகாண்டா | 26 |
| யுக்ரெய்ன் | 33 |
| ஐக்கிய அரபு அமீரகம் | 67 |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 73 |
| அமெரிக்கா (USA) | 69 |
| உருகுவே | 74 |
| உஸ்பெக்கிஸ்தான் | 31 |
| வனுவாட்டு | 48 |
| வெனிசுவெலா | 14 |

| | |
|---|---|
| **ஜனநாயகக் குடியரசு** | **20** |
| டென்மார்க் | 90 |
| **ஜிபூட்டி** | **30** |
| **டொமினிகா** | **55** |

| | |
|---|---|
| **குவைத்** | **42** |
| **கிர்கிஸ்தான்** | **27** |
| **லாவோஸ்** | **31** |
| **லாட்வியா** | **59** |

| | |
|---|---|
| **ரொமேனியா** | **46** |
| **ரஷ்யா** | **28** |
| **ரவாண்டா** | **51** |
| **செயின்ட் லூசியா** | **55** |

| | |
|---|---|
| **வியட்நாம்** | **42** |
| **யெமன்** | **16** |
| **ஜாம்பியா** | **33** |
| **ஜிம்பாப்வே** | **23** |

[1] CPI மதிப்பெண்கள் Transparency International பிரசுரித்த 2023 ஊழல் பார்வைக் குறியீட்டெண் (2023 Corruption Perception Index) அடிப்படையிலானவை.